அறிக்கை இல : **08** WW/O/22/12/23/01

நிறம் : **சிவப்பு**

### கடும் காற்று மற்றும் கொந்தளிப்பான கடல் தொடர்பான ஆலோசனை

இயற்கை அனர்த்தம் தொடர்பான முன்னெச்சரிக்கை நிலையத்தினால்

2022 டிசம்பர் 24ஆம் திகதி பிற்பகல் 03.00 மணிவரை செல்லுபடியாகும் வகையில்

2022 டிசம்பர் 23ஆம் திகதி பிற்பகல் 03.00 மணியில் வெளியிடப்பட்டது

### நாட்டின் கிழக்கு மற்றும் வடக்கு கடற்பரப்புகளுக்கும் தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளுக்கும்:

**தயவுசெய்து அவதானமாக இருக்கவும்!**

**தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளுக்கு மேலாக விருத்தியடைந்த தாழமுக்கம் இன்று (23ஆம் திகதி) காலை திருகோணமலைக்கு வடகிழக்காக 370 கிலோ மீட்டர் தூரத்தில் வட அகலாங்கு $10.1^0$ N இற்கும் கிழக்கு நெடுங்கோடு $84.2^0$ E இற்கும் அருகில் மையம் கொண்டிருந்தது. அது தொடர்ந்து வரும் 48 மணித்தியாலங்களில் மேற்கு - தென்மேற்குத் திசையில் மெதுவாக இலங்கையின் கிழக்கு கரையோரப் பிரதேசங்களை நோக்கி நகரக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.**

**மத்திய மற்றும் தென்மேற்கு வங்காள விரிகுடா ஆழம் கூடிய கடற்பரப்புகளிலும் கிழக்கு மற்றும் வடக்கு கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 55-65 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுவதுடன் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.**

**ஆலோசனை வழங்கப்படும் நடவடிக்கைகள்:**

- **மன்னாரிலிருந்து காங்கேசந்துறை, திருகோணமலை, மற்றும் மட்டக்களப்பு ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட ஆழம் கூடிய மற்றும் ஆழம் குறைந்த கடற்பரப்புகளிலும் தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளிலும் (07N - 17N, 80E – 85E) கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் மறு அறிவித்தல் வரை நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள்.**
- **இந்தப் பிரதேசத்தில் கடலில் இருப்போர் உடனடியாக கரைக்குத் திரும்புமாறு அல்லது பாதுகாப்பான பிரதேசத்திற்கு நகருமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள்.**

- **கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களத்தால் வழங்கப்படும் எதிர்கால ஆலோசனைகள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறீர்கள்.**